# 5வது சிறுவழக்குகள் நீதிமன்றம்
# ( மோட்டார் வாகன விபத்து வழக்குகள் தீர்ப்பாயம், சென்னை)

# MCOP No. 1199/2023

| | |
|---|---|
| சாட்சியின் வரிசை எண் | எமசா1 |
| பெயர் | கமலக்கண்ணன் |
| க/த.பெயர் | பாலசுந்தரம் |
| வயது | 35 |
| விலாசம் | பேரம்பாக்கம், திருவள்ளூர் |
| தொழில் | துணை மேலாளர் |

சாட்சி அமர்வு எழுத்தரால் உறுதி மொழி சட்டம் 1969 ன் பிரிவு 6 ன் படி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அதன் படி அவரது சாட்சியம் இன்று 25.02.2026 ல் பதிவு செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் 2ஆம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் துணை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். என்னுடைய சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். நான் படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்கிறேன். எங்கள் நிறுவனத்தில் வழங்கிய அதிகாரமளிப்பு கடிதம் எமசாஆ1, காப்பீடு நகல் எமசாஆ2, லீகல் நோட்டீஸ், போஸ்டல் ரிசிப்ட் எமசாஆ3, மோட்டார் வாகன ஆய்வறிக்கை TN73AV0524 எமசாஆ4

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் கோப்புகளின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் நான் புலன் விசாரணை அதிகாரி இல்லை என்றால் சரிதான்.

எமசாஆ4ல் ஓட்டுநர் உரிமம் தாக்கல் செய்யப்படவில்லை என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வட்டார போக்குவரத்து அதிகாரியை விசாரித்தால் தான் ஓட்டுநர் உரிமம் இல்லை என்று தெரியவரும் என்றால் சரியல்ல. எமசாஆ3ல் 13.11.2022 விபத்து நடந்த தேதி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரருக்கு நாங்கள் அனுப்பிய கடித்தத்தின் ஒப்புகை அட்டை இணைக்கப்படவில்லை என்றால் சரிதான். நான் விபத்து நடந்த 3 வருடம் கழித்து தான் நாங்கள் லீகல் நோட்டீஸ் அனுப்பியுள்ளோம் என்றால் 21.07.2025 எங்கள் வழகறிஞர் மூலம் நோட்டீஸ் அனுப்பப்பட்டது. நான் விபத்து நடந்து மனுதாக்கல் செய்யபடப்பட்ட பிறகு நோட்டீஸ் அனுப்பியிருந்தால் உண்மை தன்மை தெரியவரும் என்றால் சரியல்ல. விபத்து நடந்த தேதியில் காப்பீடு நிலுவையில் தான் இருந்ததா என்றால் நிபந்தைகளுக்குட்பட்டடு நிலுவையில் இருந்தது. விபத்தில் இறந்து போன நபர் 3ம் தரப்பினர் என்றால் சரிதான். விபத்தில் இறந்து போன வாரிசுதாரருக்கு எங்கள் நிறுவனம் தான் இழப்பீடு வழங்க வேண்டும் என்றால் சரியல்ல.

| |
|---|
| சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.<br><br>**5 வது நீதிபதி**<br>**சென்னை** |